வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 596 /அ2/2022 நாள் 03.03.2022

பொருள் வேலூர் மாவட்டம் – மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் நர்சரி & பிரைமரி பள்ளிகள் - 2020 – 2021 கல்வியாண்டில் நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் குழந்தைகளுக்கான RTE Act – 2009 12(1) C ன் படி 25% இட ஒதுக்கீட்டில் மாணவர்களை சேர்க்கை செய்வதற்கும் மற்றும் 2013 -14 முதல் 2019 – 2020 வரை 25% இட ஒதுக்கீட்டில் மாணவர்களை சேர்க்கை செய்து தொடர்ந்து பயிலும் மாணவர்களுக்கான நிர்ணயம் செய்யப்பட்ட கல்வி கட்டணத் தொகையை அங்கீகாரம் பெற்ற சிறுபான்மை அல்லாத தனியார் பள்ளிகளுக்கு 2020- 2021 நிதியாண்டில் ஈட்டளிப்பு வழங்கியத் தொகை – ஒத்திசைவு செய்தல் ( Reconciliation Module ) – சார்பாக

பார்வை 1. அரசாணை (நிலை) எண் 163, பள்ளிக் கல்வி (MS )த் துறை நாள் 29.11.2021

2. மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர் அவர்களின் கடித. ந.க.எண் 1000/ இ1/ 2020 நாள் 29.11.2021

3. மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர் அவர்களின் கடித. ந.க.எண் 1000/ இ1/ 2020 நாள் 29.11.2021

பார்வையில் கண்ட கடிதங்களின் படி 2020 . 2021 ஆம் கல்வியாண்டில் நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் குழந்தைகளுக்குக்கான RTE Act – 2009 12 (1) C ன் படி 25 % இட ஒதுக்கீட்டில் மாணவர்களை சேர்க்கை செய்ததற்கும் மற்றும் 2013 – 14 முதல் 2019 – 2020 வரை 25 % இட ஒதுக்கீட்டில் மாணவர்களை சேர்க்கை செய்து தொடர்ந்து கல்வி பயிலும் குழந்தைகளுக்கும் 75% கல்வி கட்டணத் தொகையை அங்கீகாரம் பெற்ற சிறுபான்மை அல்லாத தனியார் பள்ளிகளுக்கு விடுவிக்க பார்வை 1ல் காண் அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்கள் பள்ளிகளுக்கு பெறப்பட்ட ஈட்டளிப்புத் தொகைக்கு, பள்ளிகளிடமிருந்தும், இவ்வலுவலகத்திலிருந்தும் பயனீட்டுச் சான்றிதழ் பெற்று தமிழக அரசுக்கு சமர்பிக்கப்பட வேண்டியுள்ளதால் ,வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலை / நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி தாளாளர்கள் கீழ்க்காணும் வகையில் TNEMIS இணையதளத்தில் ஒத்திசைவு தொகுதி (Reconciliation Module) உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எனவே தங்கள் பள்ளிக்குரிய 2020 – 2021 ஆம் கல்வியாணடிற்குரிய பள்ளியினால் பெறப்பட்ட தொகை மற்றும் நாள் ஆகியவை பதிவேற்றம் செய்து மெட்ரிக் பள்ளிகள் பெறுத்தமட்டில் (DEO)வேலூர் , மாவட்டக் கல்வி அலுவலகத்திலும் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள் அந்தெந்த ஒன்றியத்திற்குட்பட்ட (BEO) வட்டாரக் கல்வி அலுவலகத்தில் (Utilization Certificate) மற்றும் வங்கி கணக்கு புத்தகத்தில் மேற்காணும் தொகை பெறப்பட்ட பக்க நகலினையும் சார்ந்த பள்ளியின் முதல்வர் / தாளாளர் கையொப்பத்துடன் சமர்பிக்குமாறு அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மற்றும் நர்சரி / பிரைமரி பள்ளி தலைமைஆசிரியர்கள் முதல்வர்கள் / தாளாளர்கள் மீள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இப்பணியை 10.03.2021 ற்குள் காலதாமத்திற்கு இடமளிக்காமலும்** எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் பணியினை முடித்து மேற்காண் சார்ந்த அலுவலகங்களில் சமர்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**<u>பள்ளி அளவில் பணிகள்.</u>**

1. EMIS User Name மற்றும் Password யை பயன்படுத்தி தரவுகளை சரிபார்த்தல் வேண்டும். **(2020 – 2021)** ஆண்டிற்கான விவரங்களை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது )
2. பள்ளியினால் பெறப்பட்ட தொகை பெறப்பட்டிருப்பின் ஒருங்கிணைந்த பள்ளி வங்கி கணக்கில் செலுத்தப்பட்ட தொகை மற்றும் நாள் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.
3. அதிகப்படியான தொகை பெறப்பட்டிருப்பின் ஒருங்கிணைந்த பள்ளி வங்கி கணக்கில் செலுத்தப்பட்ட தொகை மற்றும் நாள் விவரம் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.
4. சரியாக தொகைக்கு பயனீட்டுச் சான்றிதழ் (Utilization Certificate ) பள்ளியின் முதல்வர் / தாளாளர் ( beneficiary ( வங்கிக் கணக்கில் தொகை பெற்றவர்) படிவத்தை பூர்த்தி செய்து பதிவேற்றம் செய்தல் வேண்டும் ( Utilization Certificate model – RTE module -ல் Download செய்து கொள்ள வேண்டும் )

<u>இணைப்பு-</u>

**பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள்**

( ஒப்பம்,,,,,,,,,,,)

முதன்மைக்கல்வி அலுவலர்

வேலூர்

பெறுநர்

1. **வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.**
2. **அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர்கள் / தாளாளர்கள்.**